DEPOSITION OF WITNESS
(Chapter XXV of BNSS)
IN THE COURT OF Prl. DISTRICT AND SESSIONS JUDGE
KANNIYAKUMARI AT NAGERCOIL

Calendar
Miscellaneous
Preliminary Register
Session Case S.C.No. 200/2024

Prosecution Witness - P.W. 1

Deposition of witness for Prosecution

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி.ராஜேஸ்வரி |
| Father's Name | : | க/பெ.முத்துபிள்ளை |
| Village | : | மங்கலம் |
| Taluk | : | திருவட்டார் |
| Calling | : | House Wife |
| Age | : | 47 |
| Date | : | 03.09.2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.09.2025.

(எதிரி ஆஜரில்லை. அவருக்காக பிரிவு 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

03.09.2025

**முதல் விசாரணை**:-

நான் மங்கலம், புளிமூடு ஜங்சனில் வசித்து வருகிறேன். இந்த வழக்கின் அனீஷை தெரியும். எனது கணவரின் பெயர் முத்துபிள்ளை. எனது கணவருக்கு மரம் வெட்டும் தொழில். அனீஷுக்கும் மரம் வெட்டும் தொழில்தான். 01.01.2024 அன்று எனது கணவர் குலசேகரம் கடைக்கு செல்வதற்கு காலை 10.45 அல்லது 11.00 மணியளவில் புளிமூடு ஜங்சன் பஸ் ஸ்டாண்டில் காத்திருந்தார். அப்போது அனீஷ்

வந்து அவரிடம் குடிப்பதற்காக ரூபாய் கேட்டுள்ளான். அதற்கு காசில்லை நீ வேலைக்கு போய் குடி என எனது கணவர் சொல்லியுள்ளார். என்னை வேலைக்கு போக சொல்ல நீ யார் என கெட்டவார்த்தை பேசியுள்ளான். கீழே கிடந்த சாவியை எடுத்து எனது கணவரின் வலது கண் புருவத்தில் குத்தியுள்ளான். அதன்பிறகு எனது கணவரை சவட்டி கீழேபோட்டு தலையை பிடித்து பஸ் ஸ்டாண்டிலிருந்த திண்டில் திரும்ப திரும்ப மோதியுள்ளான். தலையை திருப்பி திருப்பி அவ்வாறு நான்கு பக்கமும் மோதியுள்ளான். எனது இரண்டாவது மகள் ஷைனி அவ்வாறு எனது கணவரை அனீஷ் அடிப்பதை பார்த்து சத்தம் போட்டவுடன் நான் வெளியே வந்து பார்த்தேன். எங்கள் வீடும் அந்த பஸ் ஸ்டாண்ட் பக்கத்தில்தான் ரோட்டிலேயே உள்ளது. ஷைனி எங்கள் வீட்டு வாசலில் இருந்து பார்த்தார். அனீஷ் ஓடி விட்டான். எனது கணவரின் கண் புருவத்தில் குத்தியிருந்தான். வலது தொடையிலும் குத்தி இழுத்திருந்தான். எனது மகள் ஷைனியிடம் கேட்டேன் நடந்த சம்பவத்தை சொன்னாள். அப்போது அங்கு ஒரு ஆட்டோ வந்தது அதில் நானும், செல்வமணி மகன் ரமேஷ் என்பவரும் எனது கணவரை குலசேகரம் காவஸ்தலம் அருகே உள்ள டேவிட் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கூப்பிட்டு சென்றோம். பார்த்தவுடன் அங்கே எதுவும் செய்ய முடியாது என்றும் சொல்லி ஆசாரிபள்ளம் மருத்துவமனைக்கு கொண்டு போக சொன்னார்கள். எனது கணவர் அப்போது மயக்கத்தில் இருந்தார். அங்கிருந்து எனது கணவரை ஆம்புலன்சில் ஆசாரிபள்ளம் மருத்துவமனைக்கு கொண்டு போனோம். அங்கு மதியம் 1 மணியளவில் போய் சேர்ந்தோம். அங்கு எனது கணவரை சேர்த்து சிகிச்சை கொடுத்தார்கள். நான் எனது மூத்த மகள் ஜினியை

வைத்து ஒரு பெட்டிசன் எழுதினேன். ஜினிதான் அந்த பெட்டிசனை எழுதினாள். அன்று இரவு 8.00 அல்லது 8.30 மணியளவில் குலசேகரம் போலீசார் ஆசாரிபள்ளம் மருத்துவமனைக்கு வந்தார்கள். அந்த பெட்டிசனை அவர்களிடம் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் ஆவணம்தான் நான் அப்போது கொடுத்த பெட்டிசன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். எனது மகள் ஜினி அந்த பெட்டிசனில் அறிவேன் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளார். **அந்த புகார் அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. 2 ஆம் தேதி குலசேகரம் காவல் நிலைய உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார். சிகிச்சையில் இருந்த எனது கணவர் 13 ஆம் தேதி காலை 4.00 மணியளவில் இறந்துவிட்டார். அதுவரையில் அவர் பேசவும் இல்லை, தண்ணீர் கூட குடிக்கவும் இல்லை. சம்பவம் நடந்த சமயத்தில் எனது கணவர் என்ன உடை அணிந்திருந்தார் என்றால் டிசர்ட்டும், லுங்கியும் அணிந்திருந்தார். டிசர்ட்டில் ரத்தம் பட்டிருந்தது. லுங்கியில் எதுவும் படவில்லை. டிசர்ட்டை ஆஸ்பத்திரியில் எனது கணவரின் உடலிலிருந்து வெட்டி என்னிடம் தந்தார்கள். அதை நான் குப்பைத் தொட்டியில் போட்டுவிட்டேன். லுங்கியை என்னிடம் தரவில்லை. எனது கணவர் இறந்தபிறகு ஆய்வாளர் மார்ச்சொரி அருகே வைத்து என்னை விசாரித்தார். எனது கணவரின் தலை அவ்வாறு அடித்ததில் வீக்கமாக இருந்தது.

**<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்) :-</u>**

போலீசார் ஆசாரிபள்ளம் மருத்துவமனை வந்து விசாரிக்கும்போது என்ன நடந்தது என்று சொன்னேனா என்றால் சொன்னேன். அதை அவர்கள் எழுதி கொண்டார்களா என்றால் ஆமாம். அதை வாசித்து காட்டி சொன்னபடி இருந்ததா

என்றால் வாசித்து காட்டவில்லை. அதில் நான் கையொப்பம் செய்தேனா என்றால் இல்லை. நான் போலீசுக்கு புகார் மனு எதுவும் எழுதி கொடுத்தேனா என்றால் ஆமாம். புகார் மனு எழுதி கொடுப்பதற்கு முன்புதான் சம்பவம் பற்றி போலீசாரிடம் சொன்னேன் என்றால் புகார் மனு எழுதி கொடுத்தபிறகு சொன்னேன். நான் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் அ.சா.ஆ.1 புகார் மனு கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. நான் கொடுத்த அ.சா.ஆ. 1 புகார் மனுவில் எனது கணவருக்கு தலையில் நான்கு பக்கமும் இடித்த விவரம் சொல்லவில்லை என்றால் அப்போதிருந்து நிலைமையில் என்ன எழுதினேன் என்று நினைவு இல்லை. அந்த புகார் மனுவில் சம்பவத்தை யார் யார் பார்த்தார்கள் என்ற விவரத்தை எழுதி கொடுத்தேனா என்றால் இல்லை. புளிமூடு ஜங்சன் பஸ் ஸ்டாண்டில் சம்பவம் நடந்தபிறகு அந்த சத்தத்தை கேட்டுதான் என் மகள் வந்து பார்த்தாள் என்றால் சரியல்ல. சம்பவத்தை அவள் பார்த்தாள். சம்பவத்தை பார்த்ததாக நான் சொல்லும் மகள் தான் ஜினியா என்றால் இல்லை, ஷைனி. போலீசார் என்னை விசாரிக்கும்போது எனது மகள் ஷைனி நான்தான் சம்பவத்தை பார்த்தேன் என்று போலீசாரிடம் சம்பவத்தை பற்றி சொன்னாரா என்றால் அப்போது ஷைனி அங்கு இல்லை. போலீசார் மனுவை வாங்கி சென்ற பிறகுதான் ஷைனி அங்கு வந்தார் என்றால் ஆமாம். எனது கணவர் இறக்கும்வரையிலும் அவர் தலையில் இடிபட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் நான் மருத்துவமனைக்கு கூட்டி செல்லும்போதே பார்த்தேன். 2 ஆம் தேதி உதவி ஆய்வாளர் விசாரிக்கும்போது எனது கணவருக்கு வீக்க காயம் இருந்ததை சொன்னேனா என்றால் இல்லை. என்னை

போலீசார் விசாரிக்கும்போது எனது கணவரை புளிமூடு ஜங்சனிலிருந்து எந்த ஆட்டோவில் குலசேகரம் காவல்ஸ்தலத்திற்கு கொண்டு சென்றோம் என்ற விவரத்தை சொன்னேனா என்றால் இல்லை, எந்த ஆட்டோ என்று தெரியாது. காவல்ஸ்தலம் மருத்துவமனையில் எந்த டாக்டர் ஆசாரிபள்ளம் போக சொன்னார் என்ற விவரத்தை பெயர் குறிப்பிட்டு புகார் மனுவில் சொன்னேனா என்றால் இல்லை, அவர் பெயர் எனக்கு தெரியாது. ஆசாரிபள்ளம் மருத்துவகல்லூரி மருத்துவமனை வந்த பிறகு அங்குள்ள மருத்துவரிடம் எங்கு வைத்து, என்ன நடந்தது என்ற விவரத்தை நாங்கள் சொன்னோமா அல்லது எனது கணவர் சொன்னாரா என்றால் நாங்கள் தான் சொன்னோம். எனது கணவருக்கு அப்போது நினைவே இல்லை. நாங்கள் மருத்துவமனையில் எனது கணவரை சேர்த்ததலிருந்து இறக்கும் வரையில் எந்த எந்த வார்ட்டில் என்ன சிகிச்சை கொடுத்தார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு சம்பவத்தை பற்றி நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். சம்பவத்தை பற்றி எனக்கு முதன்முதலில் யார் சொன்னார் என்றால் எனது மகள் ஷைனிதான் சொன்னாள். நான் கொடுத்த அ.சா.ஆ. 1 புகார் மனுவிலோ அல்லது போலீசார் என்னை இரண்டு முறை விசாரிக்கும்போதே சம்பவத்தை பற்றி எனக்கு ஷைனிதான் சொன்னார் என்று சொன்னேனா என்றால் இல்லை. உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தபோது எனது கணவரின் தலை வீங்கியிருந்தது என்ற விவரத்தை சொன்னேனா என்றால் இல்லை. ஆய்வாளர் எந்த தேதியில், எத்தனை மணிக்கு என்னை விசாரித்தார் என்றால் எனது கணவர் 13 ஆம் தேதி இறந்த பிறகு என்னை விசாரித்தார். எத்தனை

மணி என்று நினைவில்லை. காலை 8 மணிக்கு முன்னர் விசாரித்திருப்பாரா என்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை. முதலில் நான் கொடுத்த புகாரிலும், உதவி ஆய்வாளர் விசாரிக்கும்போதும் எதிரி எனது கணவரின் தலையை திரும்ப திரும்ப மோதினார் என்ற விவரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் ஆய்வாளரோ, உதவி ஆய்வாளரோ விசாரிக்கவில்லை என்றாலும் வாக்குமூலங்கள் ஜோடிக்கபட்டது என்றாலும் சரியல்ல. எனது வீட்டிலிருந்து மலைஇடிஞ்சான்விளை 7 கிலோமீட்டர் தொலைவு இருக்குமா என்றால் இல்லை, 200 மீட்டர் தொலைவு இருக்கும். அந்த மலைஇடிஞ்சான்விளையில் உள்ள ரஞ்சித் என்பவருக்குதான் எனது மகள் ஷைனியை திருமணம் செய்து கொடுத்துள்ளோம் என்றால் சரிதான். மங்கலம் என்ற ஊரிலிருந்து 2 கிலோமீட்டர் கிழக்கே பொன்மலை ஊர் உள்ளது என்றால் சரிதான். அந்த பொன்மலையை தாண்டி 5 கிலோமீட்டர் தொலைவில் பெருஞ்சாணி அணைக்கு போகும் பாதையில்தான் மலைஇடிஞ்சான்விளை உள்ளது என்றால் சரிதான். எனது மகள் சம்பவத்தன்று வீட்டு வாசலில் நின்றார் என்றும், சம்பவத்தை பார்த்துவிட்டு சம்பவத்தை பார்த்தார் என்றும் சொல்வது பொய் என்றால் சரியல்ல. புளிமூடு சந்திப்பிலிருந்து 200 மீட்டர் தொலைவில் மலைஇடிஞ்சான்விளை இருப்பதாக நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் அடி மீட்டர் கணக்கு தெரியவில்லை. சாட்சி முருகன் என்பவர் எனது கணவரின் அண்ணன் தங்கநாடாரின் மகன் என்றால் சரிதான். சாட்சி புஷ்பராஜன் எனது கணவரின் அண்ணனின் மருமகன் என்றால் சரியல்ல, தூரத்து சொந்தம். அஜய் என்பவர் எனது

கணவரின் அண்ணன் அய்யாபிள்ளையின் மகன் என்றால் சரிதான். ரஞ்சித் என்பவர் எனது மகளின் கணவர் என்றால் சரிதான். எனது கணவர் செல்வன் என்ற ஒரு நபரை கொன்றுவிட்டதாக ஒரு வழக்கு நடந்ததா என்றால் எனக்கு தெரிந்து அவ்வாறு எந்த வழக்கும் நடக்கவில்லை. எனது கணவருக்கு செல்வனை கொன்ற வழக்கில் 17.03.2003 ஆம் தேதி 7 வருட கடுங்காவல் தண்டனை கொடுக்கப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அந்த செல்வன் கொலை வழக்கில் இந்த வழக்கின் எதிரியின் அப்பா கணேசன் புகார்தாரர் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. எனது கணவர் மீதிருந்த கொலை வழக்கு பற்றி எனக்கு தெரியும் என்றாலும் அதில் எதிரியின் தந்தைதான் புகார்தாரர் என்ற விவரமும் எனக்கு தெரியும் என்றாலும் அவரின் புகாரினால் எனது கணவர் தண்டனை பெற்றார் என்பதால் பழி வாங்கும் நோக்கத்தில் வேறு எந்த வகையிலோ இறந்து போன எனது கணவரை எதிரிதான் கொன்றார் என பொய்யாக புகார் கொடுத்து, பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பொன்மனை, குலசேகரம் ரோடு கிழக்கிலிருந்து மேற்காக போகும் ரோடு என்றால் சரிதான். சம்பவம் நடந்ததததாக சொல்லும் பேருந்து நிறுத்தம் அந்த இடத்தில் வடக்கு பார்த்து உள்ளது என்றால் சரிதான். அந்த பேருந்து நிலையத்திற்கு இரண்டு பக்கமும், முன்பக்கமும் நிறைய கடைகளும், வீடுகளும் உள்ளது என்றால் சரிதான். அந்த சம்பவத்தை அந்த வீட்டிலும், கடைகளிலும் உள்ள நபர்கள் பார்த்ததாக நான் சொல்லவில்லை என்றால் சரிதான். யார் யார் பார்த்தார்கள் என்று தெரியாது. பஸ் ஸ்டாப்பிற்கு நேர் எதிரே ஒரு மெடிக்கல் ஸ்டோர் எப்போதும் திறந்திருக்கும் என்றாலும் மெடிக்கல் ஸ்டோர் உள்ளது. அது எப்போதும்

திறந்திருக்காது. கௌரி மாவு மில் என்ற கடையும் சம்பவ சமயத்தில் பஸ் நிறுத்ததிற்கு எதிர்புறம் இருந்தது என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடத்திற்கு நான் போகும்போது அந்த மெடிக்கல் ஸ்டோரும், கௌரி மாவு மில்லும் திறந்திருந்ததா என்றால் அதை நான் கவனிக்கவில்லை. சம்பவ இடத்திற்கு மேற்கு பக்கம், பஸ் ஸ்டாண்டை தொட்டு சுரேஷ்குமார் என்பவரின் மளிகை கடை, மூன்று கடைகள் உள்ளது என்றால் சரிதான். அந்த மூன்று கடைகளும் சேர்த்து சுமார் 100 அடி அகலம் இருக்கும் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. சுரேஷ்குமார் மளிகை கடைக்கு மேற்கே மூன்று வீடுகள் தள்ளி எங்களது வீடு ரோட்டை பார்த்து உள்ளது என்றால் சரிதான். அந்த மூன்று வீடுகளும், தனிதனியாக ஒவ்வொரு தோட்டத்திற்குள் அமைந்துள்ளது என்றால் சரிதான். அந்த மூன்று வீடு தள்ளி சுமார் 50 அடி தொலைவில் எனது வீடு உள்ளது என்றால் சரியல்ல. 20 அடி தொலைவு இருக்கும். அந்த மூன்று வீடுகளிலும் சம்பவ சமயத்தில் இருந்தார்களா என்றால் இல்லை. டிசர்ட்டில் ரத்தம் இருந்ததை புகாரை என்னிடம் இருந்து பெற்ற போலீஸ் அதிகாரி பார்த்தாரா என்றால் இல்லை. சாவி குத்தி எனது கணவருக்கு இரண்டு இடத்தில் ஏற்பட்டிருந்த இரத்த காயத்திலிருந்து இரத்தம் கொட்டி பஸ் ஸ்டாண்ட் அருகே கொட்டியிருந்ததா என்றால் இல்லை. நான் சொல்லும் அந்த இடத்தில் வைத்து சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றாலும் அதனால்தான் வேறு யாரும் சம்பவம் குறித்து சாட்சி சொல்லவரவில்லை என்றால் சரியல்ல. இரத்தம் பட்ட ஆடைகளை காண்பித்தால் அதில் பட்டுள்ள ரத்தத்தை வைத்து சம்பவ இடத்தில் இரத்தம் தரையில் விழுந்திருக்க கூடும் என தெரிய வந்துவிடும் என்பதால் அதை மறைப்பதற்காக இரத்தக் கறை

படிந்த ஆடைகளை குப்பைத் தொட்டியில் போட்டு விட்டதாக பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான், எனது மகள் ஷைனி மற்றும் வேறு யாரும் சம்பவத்தை பார்க்கவில்லை என்றாலும் மருத்துவமனையில் வைத்து உடலை பார்த்துவிட்டு அங்கே நாங்கள் ஜோடித்த பொய் வழக்கு இது என்றால் சரியல்ல. நான் கொடுத்த புகார் மனுவிலோ, ஆய்வாளர் விசாரிக்கும்போதோ, உதவி ஆய்வாளர் விசாரிக்கும்போதோ கிழே கிடந்த சாவியை எடுத்து எதிரி குத்தியதாக நான் சொல்லவில்லை என்றால் எனக்கு நினைவில்லை. கிழே கிடந்த சாவியை எடுத்து குத்தியதாக எனது மகள் ஷைனி என்னிடம் சொன்னாரா என்றால் ஆமாம். மருத்துவமனையில் எனது கணவரை சேர்த்ததிலிருந்து அவர் இறக்கும்வரையில் எனது கணவருக்கு ஸ்கேனோ, எக்ஸ்ரேயோ எடுப்பதற்கோ அல்லது அறுவை சிகிச்சை செய்வதற்காகவோ மருத்துவமனையிலிருந்து என்னிடம் ஒப்புதல் எதுவும் பெற்றார்களா என்றால் இல்லை. எனது கணவரை ஸ்கேன் எடுக்க கூட்டி சென்றார்களா என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் ஸ்கேன் எடுக்க கூட்டி சென்றார்கள், எடுத்தார்களா என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கில் எனது கணவர் பேசமுடியாமல் நினைவில்லாமல் இருந்தார் என நான் சொல்வது இந்த வழக்கிற்காக சொல்லும் பொய் என்றால் சரியல்ல. எனது கணவரிடம் பெறப்பட்ட வாக்குமூலம் மறைக்கப்பட்டு, பொய் வழக்கு ஜோடிக்கப்பட்டு, அது பொய் என்று தெரிந்து நான்பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.